| | |
|---|---|
| | **பொள்ளாச்சி நகராட்சி**<br>**03 .12.2021 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில்**<br>**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**<br>**தீர்மான எண்.3162–3163** |
| **3162)** | பொள்ளாச்சி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22–ன் கீழ் தார்சாலை அமைத்தல் பணி (சிப்பம் – I) செல்லம்மாள் நகர் (076003R643), VKV லே அவுட்(076004R134), ACM Mill ரோடு கிழக்கு மேற்கு வீதி (076021R647), ACM Mill சாலையில் வடக்கு தெற்கு வீதி (076021R648) மற்றும் இதர வீதிகளில் தார்த்தளம் அமைத்தல் பணிக்கு ரூ.230.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் (MS) எண்.92, நாள்.30.10.2021-ல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 01.12.2021–ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் அவைகளின் விலைப்புள்ளி 02.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.<br><br>1 - வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புதூர். - மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.98% அதிகம்.<br>2 - S.பார்த்திபராஜன், பொள்ளாச்சி. - மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.46 % அதிகம்.<br><br>இவற்றில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.98% அதிகமாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புதூர் அவர்களிடம் 02.12.2021 அன்று விலை குறைப்பு கோரப்பட்டது.<br>ஒப்பந்ததாரர் தனது விலை குறைப்பு கடிதத்தில், விலை விகித ஒப்பந்தப்புள்ளியில் தார்சாலை பணிக்கான மூலப்பொருட்கள், டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கள் கூலி உயர்வு காரணமாக மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது எனவும், மேற்குறிப்பிடப்பட்ட 4.98% விகிதத்தில் பணியினை மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளார்.<br>எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.98% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புதூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>2. **முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.98% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள** வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புதூர் அவர்கள் ஜல்லி விலை உயர்வு, டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கூலி உயர்வு போன்ற காரணங்களால் ஒப்பந்தப்புள்ளியில் இதற்கு மேலும் விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.<br>3. **இப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும், குறித்த காலத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்ததாரர்** வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோயம்புதூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>4. **மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**<br>**ந.க.எண்.04977/2021/இ1** |

| | |
|---|---|
| **3163)** | பொள்ளாச்சி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் தார்சாலை அமைத்தல் பணி (சிப்பம் – II) லால் பகதூர் சாஸ்திரி வீதி (076035R927), சந்திரபோஸ் வீதி (076035R928), இராஜாஜி வீதி (076035R929), சுவாமி சித்பவானந்தா வீதி (076035R930) மற்றும் இதர வீதிகளில் தார்த்தளம் அமைத்தல் பணிக்கு ரூ.145.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் (MS) எண்.92, நாள்.30.10.2021-ல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 01.12.2021-ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் அவைகளின் விலைப்புள்ளி 02.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 1 | S.பார்த்திபராஜன், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% அதிகம். |
| 2 | வெற்றி கன்ஸ்ரக்ஷன்ஸ், கோயம்புத்தூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.96% அதிகம். |

இவற்றில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% அதிகமாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களிடம் 02.12.2021 அன்று விலை குறைப்பு கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது விலை குறைப்பு கடிதத்தில், இப்பணிக்கான வ.எண். Granular sub base-ல் ரூ.1500/- M3 என ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டதனை ரூ.5/- மட்டும் குறைத்து ரூ.1495/- M3 என்றவாறு ஒரு இனத்திற்கு விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளனர். விலை குறைப்பு செய்யப்பட்டதற்கு பின்பு 4.91% அதிகமாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவாகவும் உள்ளது. விலை விகித ஒப்பந்தப்புள்ளியில் தார்சாலை பணிக்கான மூலப்பொருட்கள், டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கள் கூலி உயர்வு காரணமாக மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது எனவும், மேற்குறிப்பிடப்பட்ட 4.91% விகிதத்தில் பணியினை மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளார்.

எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.91% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.91% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள** S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்கள் ஜல்லி விலை உயர்வு, டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கூலி உயர்வு போன்ற காரணங்களால் ஒப்பந்தப்புள்ளியில் இதற்கு மேலும் விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.
3. **இப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும், குறித்த காலத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்ததாரர்** S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. **மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.04977/2021/இ1**